மாணவியருக்கு அமுல்படுத்தப்படும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பயன்பெறும் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானத்தை நிர்ணயித்துத் தனியாக ஆணை பிறப்பிக்கப்படும்.

3. தகவல் கோரல்.

(அ) காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்குள் ஒரு சடலம் கிடந்ததால் பூசைகள் நடைபெறாமல் இருப்பது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சாபாநாயகர் அவர்களே, காஞ்சீபுரத்தில் இருக்கின்ற மிகப் புகழ் பெற்ற கோவில் ஏகாம்பரநாதர் திருக்கோயில் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆண்டுகொண்டிருந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி கிளைவ் கூட அந்த ஆண்டவனுக்கு ஒரு அருமையான பதக்கம் அளிக்கின்ற அளவிற்கு உலகமெங்கும் பக்தி மணம் பரப்பும் கோவில் அந்தத் திருக்கோவில். அந்தத் திருக்கோவிலிலே ஒருவருடைய சடலம் இருப்பதாகவும், அந்தச் சடலம் இருக்கிற காரணத்தாலே கோவில் மங்கலம் இழந்ததாகவும், அதனாலே பூசைகள் நடக்காமல், பக்தர்கள் மன வேதனை உற்றிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறதே, அரசு அதனைக் கருத்திற்கொண்டு, பக்தர்களுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படும் அளவுக்கு செயற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறியதுபோல, புகழ் பெற்றதும், ராபர்ட் கிளைவ் அவர்களாலே பாராட்டப்பட்டதுமான காஞ்சி ஏகாம்பரநாதர் கோவிலில் ஒரு சடலம் இருந்தது என்பதோடு செய்தி முடிந்து விடவில்லை. அந்தச் சடலத்திற்குச் சொந்தக்காரர், ஒரு சித்து விளையாடுகிற சாமியாராக அந்தத் திருக்கோவிலில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்திருக்கிறார். அவர் அந்தக் கோவிலிலே தங்கி, பக்தர்களுக்கு அருள் பாலித்து வந்துள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. அவர் கடவுள் அருள் பெற்றவர் என்று நம்பிய காரணத்தால் மக்கள் அவரைநம்பிப் பாராட்டி, வணங்கி வந்திருக்கிறார்கள். அவர் ஞாயிற்றுக்கிழமை இறந்துவிட்டார். நீண்டகாலமாக அவர் அந்தக் கோவிலில் இருந்து வந்ததால், அவரது உடலை அந்தக் கோவிலுக்குள்ளே புதைக்க வேண்டுமென்று அவருடைய பக்தர்கள் தீர்மானித்து, அதன்படி அந்த உடலை அந்தக் கோவில் வளாகத்திற்குள் புதைத்துவிட்டார்கள். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கோவில் அர்ச்சகர்கள் கோவிலை மூடிவிட்டார்கள். பூசை, நைவேத்யங்கள் நடைபெறாது என்று அறிவித்துவிட்டார்கள். தகவல் அரசுக்குத் தெரிய வந்ததும், உடனடியாக அறநிலையத் துறை சம்பந்தப்பட்டவர்கள் காஞ்சீபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, நேரடியாக அவர்கள் இந்தப் பிரச்சினையிலே தலை

யிட்டு, நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் நேற்று இரவே காஞ்சீபுரம் சென்று வருவாய்த் துறையினரோடும், கோவில் அதிகாரிகளோடும், மற்றும் அந்தப் பக்தர்களோடும் கலந்து பேசி, அனைவரின் ஒப்புதலோடும் இராமசாமி என்று சொல்லப்படுகிற அந்த மகான் என்று அழைக்கப்பட்டவருடைய உடலை மீண்டும் கோவில் பிராகாரத்திற்குள்ளே இருந்து எடுத்து, கோவிலுக்கு வெளியிலே கொண்டு போய், வேறொரு இடத்திலே இப்போது புதைத்துவிட்டார்கள். இப்போது உடல் கோவிலிலே இல்லை. ஒருவேளை உயிர் இருக்கிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது. இப்போது அங்கே எந்தப் பிரச்சினையும் எழவில்லை. பூசைகள் வழக்கம்போல் நடக்கத் தொடங்கிவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

(ஆ) வன்னியர் சங்கத் தலைவர் பலாத்காரப் போராட்ட அறிவிப்புச் செய்துள்ளது குறித்து.

திரு. கே. ரமணி: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, தமிழகத்திலே ஒரு முக்கியமான செய்தி பத்திரிக்கையிலே வந்திருப்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டிய ஒரு தேவையை உத்தேசித்துத்தான் இந்த விஷயத்தை நான் அவை முன் வைக்கிறேன். வன்னியர் சங்கத்தினுடைய தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையிலே என்ன கூறியிருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதமானம் ஒதுக்கீடு செய்திருப்பது பற்றி அவர்களுக்கு எதிர்ப்பான கருத்து இருக்கிறது. இருக்கட்டும். அதனால் போராட்டங்கள் நடத்த வேண்டியிருக்கிறது. அந்தப் போராட்டங்கள் இது வரைக்கும் நடந்த மாதிரி போராட்டங்களாக இருக்காது, சமாதான முறையில் போராட்டங்கள் நடத்தி எந்தப் பிரச்சினையையும் அரசு தீர்க்க முடியாது என்று தெளிவாகக் குறிப்பிட்டு, போராட்டம் பலாத்காரமாக இனிமேல் நடத்தப்படுமென்று பட்டவர்த்தமான அந்த அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அரசின் சார்பிலே வெளியிட்டுள்ள அறிக்கைகளைக் கொளுத்துவது என்ற நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அடுத்தபடியாக பலாத்காரப் போராட்டம்தான் நடத்தப்படுமென்று பகிரங்கமாக அறிக்கை வெளியிடும்போது, இது சம்பந்தமாக மக்கள் மத்தியிலே ஒரு விதமான கவலையும், மோசமான நிலை ஏற்படுமோ என்கின்ற எண்ணமும் மக்கள் மத்தியிலே உருவாகிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே இதுபோன்ற பலாத்காரப் போராட்டங்கள் நடத்தப்பட்டு, பல நாட்கள் தென் பகுதி மாவட்டங்களிலே போக்குவரத்து அடியோடு ஸ்தம்பித்து நூற்றுக்கணக்கான மரங்களை வெட்டி, ரோட்டிலே போட்டு, எந்தவிதமான போக்குவரத்தும் இல்லாதபடிக்கு தடுக்கப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இது தமிழகத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் தெரியும்.